# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1986 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் இராணுவப் பயிற்சி (திருத்தம்) சட்டம்

---

*[1986, ஜூலை மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---


*1986, ஜூலை 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 30.* *தபாற் செலவு : சதம் [illegible]*

# 1986 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் இராணுவப் பயிற்சி (திருத்தம்) சட்டம்

[1986 ஜூலை மாதம் 24 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 25/85
1735

## துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள், இராணுவப் பயிற்சிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டமானது, 1986 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் இராணுவப் பயிற்சி (திருத்தம்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**363 ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

2. துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள், இராணுவப் பயிற்சிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

**"துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்களைப் பயன்படுத்துதல்.**

3. (1) துப்பாக்கிச் சூட்டு வீச்சிடமெதுவும் அமைச்சர் பொதுவான அல்லது சிறப்பான கட்டளையால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகையவாறாக இலங்கையின் கடற்படையால், தரைப்படையால், வான்படையால் அல்லது பொலிசுப்படையால் அத்தகைய துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படலாம்.

(2) (அ) இலங்கை தவிர்ந்த ஏதேனும் வேறு நாட்டின் ஏதேனும் கடற்படை, தரைப்படை அல்லது வான்படை, அமைச்சரின் முன்னைய எழுத்திலான அங்கீகாரத்துடனும் அமைச்சரால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தின்போதும், அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அத்தகைய துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக்காகத் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடமெதனையும் பயன்படுத்தலாம்.

(ஆ) இலங்கையிலுள்ள சுழல் துப்பாக்கிக் கழகத்தின் எவரேனும் உறுப்பினர் பாதுகாப்பு என்ற விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன், அத்தகைய செயலாளரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியின்போதும், அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாகவும், அத்தகைய துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிக்காக ஏதேனும் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடத்தினைப் பயன்படுத்தலாம்.".

ஜ 090542—2,865 (05/86)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.